# அமித்ஷா அல்ல; எந்த ஷா வந்தாலும் எதிர்கொண்டு நீதியை நிலைநாட்டுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

நம் நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவும், சமத்துவம், சமூகநீதி, சிறுபான்மையினர் நலன் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நலன் காக்கும் மாபெரும் இயக்கமாக முன்வரிசையில் நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொதுக்குழுக் கூட்டம் நம் ஒப்பற்ற கழகத் தலைவர் அறிவுறுத்தலின்படி, வருகின்ற ஜூன் 1-ஆம் நாள் கூடல் மாநகராம் மதுரையில் நடைபெறும் என்று இம்மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 4**

**அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகார அத்துமீறலுக்குக் கண்டனம்!**

**மக்கள் மன்றத்திலும் - சட்டத்தின் துணை கொண்டும்; தி.மு.க. எதிர்கொள்ளும்!**

நீதித்துறை உள்ளிட்ட அனைத்துத் தன்னாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளிலும் அத்துமீறிக் குறுக்கிட்டு - அந்த அமைப்புகளின் சுதந்திரத்தைப் பறித்து வருவதோடு - தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் மட்டுமே வருமான வரித்துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றின் ரெய்டுக்கும், சோதனைகளுக்கும் இலக்காகும் வகையில் அதிகார அத்துமீறல் செய்து - அறிவிக்கப்படாத நெருக்கடிநிலைமையை உருவாக்கி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமானவரித்துறை போன்ற நடுநிலை தவறாது செயல்பட வேண்டிய அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளதன் விளைவாக இன்று உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதி மன்றத்தின் கண்டனத்திற்கு இந்த அமைப்புகளை ஆளாக்கி, அ.தி.மு.க. போன்ற கட்சிகளை மிரட்டி கூட்டணி அமைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த அமைப்புகளை ஈடுபடுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் ஒரு அமலாக்கத்துறை அதிகாரி லஞ்சம் பெறும் போது கைது செய்யப்பட்ட நடவடிக்கையை "பழிவாங்கும் நடவடிக்கை" எனக் கூறிய அமலாக்கத்துறையைப் பார்த்து; இப்போது டெல்லி உயர்நீதிமன்றமும், மாண்பமை உச்சநீதிமன்றமும் அந்த அமைப்புகளில் நடக்கும் ஊழல்களைக் கண்டித்துக் கொண்டு இருப்பதையும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் பதிவு செய்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்காக அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு பயன்படுத்துவதை திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் துணை கொண்டு துணிச்சலுடன் எதிர்கொண்டு, ஏற்கெனவே கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி, அமித்ஷா அல்ல; எந்த ஷா வந்தாலும் - அவர்கள் எத்தனை பரிவாரங்களைச் சேர்த்துக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்த்து, நீதியை நிலைநாட்டிடவும் - மக்கள் மன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகார அத்துமீறலை எடுத்துரைத்திடவும் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முற்போக்கான சிந்தனைகளுடன் கடமையாற்றிய போப்!

### இரங்கல் தீர்மானம்!



ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பகல்காமில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்கள் அனைவருக்கும் இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது.

முற்போக்கான சிந்தனைகளுடன் கடமையாற்றிய கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கும் இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது.

---

கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரையாற்றுகிறார்!

## திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!





திண்டுக்கல், மே 4-

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, இ. பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (05.05.2025 - திங்கட்கிழமை), காலை 10.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமிஅவர்கள் சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையில் திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடு மஹால் ஹாலில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றிய மற்றும் பேரூர் பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1. 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாக.

2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

---

ரிஷிவந்தியம் தொகுதி

## திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியத்தில் தண்ணீர் பந்தல்!

### மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருக்கோவிலூர், மே.4:

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி முழுவதும் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படியும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்கவும், கள்ளக்குறிச்சி மாவட்ட பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தலின் பேரில் சுட்டெரிக்கும் கோடை வெயிலின் வெப்பத்திலிருந்து மக்களை பாதுகாத்து, அவர்களின் தாகத்தை தணிக்கும் வகையில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் ரிஷி வந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் நடைபெற்ற தண்ணீர் பந்தல் திறப்பு விழாவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கோடைகால தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, தர்பூசணி, நீர் மோர், இளநீர், லெமன் ஜூஸ், நுங்கு, வெள்ளரி, கம்மங்கூழ், கரும்புச்சாறு, ஐஸ்கிரீம் ஆகியவைகளை கோடைகால வெப்பத்திலிருந்து சமாளிக்க, பொதுமக்களுக்கு தாகம் தணிக்கும் வகையில் வழங்கினார். அப்போது ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்களிடம் ஒவ்வொரு ஊராட்சியிலும் தண்ணீர் பந்தலை திறக்க வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பூமாரி வி.கிருஷ்ணமூர்த்தி, வடக்கு, தெற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் செட்டிதாங்கல் எஸ்.அய்யனார், ஜி.அரியூர் எம்.ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய சேர்மன் கிருஷ்ணமூர்த்தி, அரியந்தக்கா செல்வகுமார். இளைஞர் அணி துணை அமைப்பாளர் உதயா, வழக்கறிஞர் சிவகுமார், கழக நிர்வாகிகள் ராமதாஸ், பிரகாஷ், ஜெய பிரகாஷ், விஜயராமன் குருமூர்த்தி, மாரிசாமி, ஏழுமலை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக சார்பில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அத்தியூர் திருவாதியில் நடைபெற்ற கிராமச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கிராமமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் கோலியனூர் தெ.ஒன்றிய செயலாளர் தே.முருகவேல், கோலியனூர் ஒ.பெருங்குழு தலைவர் E. சச்சிதானந்தம், பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், மாவட்ட கவுன்சிலர்கள் வனிதா அரிராமன், கேசவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்செல்வகுமார், ஊ.மன்ற தலைவர் நாகஜோதி பாலு, ஊ.மன்ற.து. தலைவர் உஷா ஜோதி, ஒ.அவைத்தலைவர் தேவகிருஷ்ணன், ஒ.து.செயலாளர் கலியமூர்த்தி, பாலாஜி, ராஜமேரி வீரபத்திரன், ஒ.பொருளாளர் காசிநாதன் மாவட்ட பிரதிநிதி சடகோபன், கண்ணப்பன், N.R.மணி, MGS. ஞானவேல், கி.செயலாளர் ராமதாஸ், முருகதாஸ், மணிகண்டன், கோபு, ஏழுமலை, சண்முகசுந்தரம், சிவா மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பகரைன் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA) "உறுப்பினர்களின் தொகுதிகளில் களப்பணி என்ற தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. பொதுச் செயலர் மன்னை முபாரக் கூட்டத்தை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார். பொறுப்பாளர் முகம்மது உசைன் மாலிம் தலைமை உரையாற்றினார். ரவிச்சந்திரன். சங்கீதா பாபு. கபீர் அகமது. சுல்தான் இப்ராஹிம். திருமேனி.குடந்தை ஆரிப். சதீஷ்குமார்.சர்புதீன். பிரபாகரன். மணிவண்ணன்.ஆபித். அசோக் குமார். குளச்சல் சபிக். டேவிட் .லலித். இப்ராஹிம். பகுருதீன். ஹக்கீம். சிதம்பரம்.மணிமாறன்.காதர். ஆசாத் மைதீன். ஏ சாகுல் ஹமீத்.சாகுல் ஹாஜா. மீரான் மைதீன். யூசுப் தீன். அக்பர் அலி. வல்லம் முகமது ஆரிப். வல்லம் பாரூக். மாரிதாஸ். அல்லா பிச்சை. மாலிக் முகமது. முகமது அபூபக்கர். ஜெகபர் சாதிக். கேசவன். சங்கர் தாஸ். செந்தில். வெங்கடேசன் .மற்றும் நிர்வாகிகள் அனைவரும் இதில் கலந்து கொண்டார்கள்